# வேதாகமத்தின் மாபெரும் சத்தியங்கள்

பாடம் – 49

# உடன்படிக்கைகள் பற்றிய பாடம்



## The Study of the Covenants

Bible Research and Study Centre

# வேதாகமத்தின் மாபெரும் சத்தியங்கள்

# உடன்படிக்கைகள் பற்றிய பாடம்

# The Study of the Covenants



கிறிஸ்து இயேசுவுக்குள் பிரியமான சகோதர சகோதரிகளே.

இன்றைக்கு நாம் தேவனுடைய உடன்படிக்கைகள் குறித்து தியானிப்போம். நம் தேவன் உடன்படிக்கைகளை ஏற்படுத்துகிறவரும், அவைகளை நிறைவேற்றுகிற தேவனாக இருக்கிறார்.

- உடன்படிக்கைகள் என்பது எதைக் குறிக்கிறது?

இது தேவனால் ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தம் அல்லது முத்தரிக்கப்பட்ட வாக்குறுதியாகும்.இது நிறைவேறித்தீரும் காலம்வரை முறிக்கமுடியாததாக இருக்கிறது. நம்முடைய அனுதின வாழ்க்கையில் இந்த "உடன்படிக்கைகள்" அல்லது ஒப்பந்தங்களுக்கான அநேக உதாரணங்களைக் காண்கிறோம். அவற்றில் முக்கியமானதாக ஒரு ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையில் செய்யப்படும் விவாக உடன்படிக்கை இருக்கிறது. இந்த உடன்படிக்கையின்படி ஒவ்வொருவரும் மரணபரியந்தம் மற்றவருக்கு உண்மையுள்ளவராக இருக்க உறுதியளிக்கின்றனர்.

தேவன் ஏற்படுத்தின முதல் உடன்படிக்கையானது ஜலப்பிரளயத்திற்கு பின்பு நோவாவிடம் செய்யப்பட்டதாகும். இதைக்குறித்து வாசிக்கையில் -

**ஆதியாகமம் 9:9-11**

***"நான் உங்களோடும் உங்களுக்குப் பின்வரும் சந்ததியோடும்,
உங்களோடே பேழையிலிருந்து புறப்பட்ட சகல ஜீவஜந்துக்கள் முதல்
இனிப் பூமியில் உண்டாகப்போகிற சகல ஜீவ ஜந்துக்கள் பரியந்தம்,
பறவைகளோடும், நாட்டு மிருகங்களோடும், உங்களிடத்தில் இருக்கிற பூமியிலுள்ள
சகல காட்டு மிருகங்களோடும் என் உடன்படிக்கையை ஏற்படுத்துகிறேன்.
இனி மாம்சமானவைகளெல்லாம் ஜலப்பிரளயத்தினால்சங்கரிக்கப்படுவதில்லையென்றும்,
பூமியை அழிக்க இனி ஜலப்பிரளயம் உண்டாவதில்லையென்றும்,
உங்களோடே என் உடன்படிக்கையை ஏற்படுத்துகிறேன் என்றார்"***

ஆம். இது இனிமேல் ஜலப்பிரளயம் பூமியின்மேல் சம்பவிக்காது என்று நோவாவிடம் தேவன் பண்ணின உடன்படிக்கை ஆகும்.

➡ இந்த உடன்படிக்கையை தேவன் நிறைவேற்றினாரா?

இன்றும் அநேக இடங்களில் ஜலப்பிரளயம் சம்பவிப்பதை ஒவ்வொரு வருடமும் காண்கிறோமே...அப்படியிருக்க, தேவன் நோவாவிடம் இனி ஜலப்பிரளயம் வருவதில்லை என்று

வாக்களித்தது என்னவாயிற்று? வேத வசனங்களை நாம் வாசிக்கையில் -

**ஆதியாகமம் 9:11**

***"பூமி முழுவதையும் அழிக்க இனி ஜலப்பிரளயம் உண்டாவதில்லையென்றும்.."***

இங்கு நாம் கவனிப்பது என்னவென்றால், நோவாவின் நாட்களில் "பூமி முழுவதையும் அழித்த" ஜலப்பிரளயத்தை போன்று இன்னொன்றை அனுமதிப்பதில்லை என்பதே தேவனுடைய வாக்குறுதி மற்றும் உடன்படிக்கையாகும்.



இன்று அநேக இடங்களில் பாதிப்பை ஏற்படுத்தும் "சிறிய" வெள்ளப்பெருக்கை குறித்து அவர் பேசவில்லை. நாம் இப்பொழுது "அதரிசனமான தேவனாகிய"நம்முடைய பரலோகபிதாவைக் குறித்து வெளிப்படுத்தலில் சொல்லப்பட்டுள்ள சில விசேஷமான காரியங்களை வாசிக்கலாம் -

**வெளிப்படுத்தல் 4:3**

***"வீற்றிருந்தவர், பார்வைக்கு வச்சிரக்கல்லும் பதுமராகத்துக்கும் ஒப்பாயிருந்தார். அந்தச் சிங்காசனத்தைச் சுற்றி ஒரு வானவில்லிருந்தது. அது பார்வைக்கு மரகதம்போல் தோன்றிற்று"***

இங்கு **'சிங்காசனம்"** என்பது பரலோகப் பிதாவைக் குறிப்பதாயுள்ளது.இப்பொழுது நாம் **'சிங்காசனத்தைச் சுற்றி ஒரு வானவில்லிருந்தது** " என்பதைக் குறித்து காண்போம் . இது எதைக் குறிக்கும்? இது தேவனைக்குறிக்கும் அடையாளம் பற்றினதாகும். இங்கு வானவில் எதை அடையாளப்படுத்துகிறது? இதற்கான பதிலை வாசிப்போம் -

**ஆதியாகமம் 9:12,13**

***"அன்றியும் தேவன், எனக்கும் உங்களுக்கும் , உங்களிடத்தில் இருக்கும் சகல ஜீவ ஜந்துக்களுக்கும், நித்திய தலைமுறைகளுக்கென்று நான் செய்கிற உடன்படிக்கையின் அடையாளமாக நான் என் வில்லை மேகத்தில் வைத்தேன். அது எனக்கும் பூமிக்கும் உண்டான உடன்படிக்கைக்கு அடையாளமாயிருக்கும்"***

வானவில் என்பது தேவன் நோவாவிடம் பண்ணின உடன்படிக்கைக்கு அடையாளமாயிருக்கிறது. ஆனால் நாம் வாசித்த வசனப்பகுதியில் உள்ள வானவில் , நோவாவிடம் பண்ணின உடன்படிக்கையை குறிக்காமல், மாறாக உடன்படிக்கைக்கான பொதுவான அடையாளமாயிருக்கிறது.

**இந்த வானவில் 'சிங்காசனத்தை சுற்றி" இருப்பது, சர்வ வல்லமையுள்ள பரலோகப் பிதா - உடன்படிக்கைகளை ஏற்படுத்துகிறவரும், நிறைவேற்றுகிறவருமாயிருப்பதை காண்பிக்கிறது .**

இந்த உடன்படிக்கைகள் அவருக்கு மாத்திரம் முக்கியமானதாக இல்லாமல், நமக்கும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கிறது. அவைகள் மனுக்குலம் அனைத்திற்கும் வரப்போகிற ஆசீர்வாதங்களுக்கு அஸ்திபாரமும், உத்திரவாததுமாயிருக்கிறது. இப்படியிருக்க,

⇨ "அது பார்வைக்கு மரகதம்போல் தோன்றிற்று" என்பது எதைக்குறிக்கிறது? மரகதம் என்பது

பச்சை நிறத்தில் காணப்படுகிற கல்லாகும். ஆனால் வானவில்லானது ஏழு நிறங்களை கொண்டுள்ளது. அதை ஆங்கிலத்தில் **VIBGYOR- (Violet, Indigo, Blue, Green, Yellow, Orange, Red)** என்று அழைப்பர். ஆகையால், "ஏழு நிறங்களைக் கொண்ட" வானவில்லானது பச்சை நிறத்தில் காணப்படுவது எவ்வகையில் சாத்தியமாகும்? அந்த வானவில்லை பச்சை நிற கண்ணாடியின் வழியாக பார்க்கும்பொழுது, அது முழுவதும் பச்சை நிறத்தில் இருப்பதுபோல தோன்றும். இந்த சிந்தையே வெளிப்படுத்தின விசேஷத்தை எழுதியவர் வெளிப்படுத்துகிறார். ஆனால் இவையனைத்தும் அடையாள பாஷையில் இருப்பதை நினைவில் கொள்ளவேண்டும். ஆகவே பச்சை நிறம் என்பது ஜீவனைக் குறிக்கிறது.

நம்மை சுற்றியுள்ள இயற்கையை சற்று கவனித்தால் இதை உணரமுடியும். ஜீவனோடு இருக்கும் செடி, கொடி மற்றும் மரங்கள் அனைத்தும் பச்சை நிறத்தில் காணப்படுகிறது. இவ்விதமாக,'அந்த சிங்காசனத்தைச் சுற்றி ஒரு வானவில்லிருந்தது, அது பார்வைக்கு மரகதம்போல் தோன்றிற்று..." என்பது தேவனுடைய உடன்படிக்கைகள் அனைத்தும் ஜீவன் கொடுக்கக்கூடியதாக இருக்கும் உண்மையை குறிக்கிறது.

இவ்விதமாக தேவன் ஏற்படுத்தி பதிவு செய்யப்பட்டுள்ள அநேக உடன்படிக்கைகளில் முக்கியமான மூன்றை இன்றைய பாடத்தில் நாம் காண இருக்கிறோம்.

## உடன்படிக்கை - 1

முதல் உடன்படிக்கையைக் குறித்த விபரங்களை நாம் வாசிக்கையில் -


**ஆதியாகமம் 22:15-18**



***"கர்த்தருடைய தூதனானவர் இரண்டாந்தரம் வானத்திலிருந்து ஆபிரகாமைக் கூப்பிட்டு.. நீ உன் புத்திரன் என்றும், உன் ஏகசுதன் என்றும் பாராமல் அவனை ஒப்புக்கொடுத்து இந்தக் காரியத்தைச் செய்தபடியால், நான் உன்னை ஆசீர்வதிக்கவே ஆசீர்வதித்து, உன் சந்ததியை வானத்து நட்சத்திரங்களைப்போலவும், கடற்கரை மணலைப்போலவும் பெருகவே பெருகப்பண்ணுவேன் என்றும், உன் சந்ததியார் தங்கள் சத்துருக்களின் வாசல்களைச் சுதந்தரித்துக்கொள்ளுவார்கள் என்றும், நீ என் சொல்லுக்குக் கீழ்ப்படிந்த- - படியினால், உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும் என்றும் என்பேரில் ஆணையிட்டேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றார்"***

இந்த உடன்படிக்கையானது ஆபிரகாமின் உடன்படிக்கை என்று அழைக்கப்படுகிறது. இதை ஆபிரகாம் தன்னுடைய ஒரே குமாரனாகிய ஈசாக்கை தேவனுக்கு கீழ்ப்படிந்து மோரியா மலையில் பலியிட முன்வந்தபோது தேவன் ஆபிரகாமிடம் பண்ணினதாகும்.

## உடன்படிக்கை - 2



இரண்டாவது உடன்படிக்கையின் விபரங்களை குறித்து வாசிக்கையில் -

**யாத்திராகமம் 19:5-8**

***"இப்பொழுது நீங்கள் என் வாக்கை உள்ளபடி கேட்டு, என் உடன்படிக்கையைக் கைக்கொள்வீர்களானால்,சகல ஜனங்களிலும் நீங்களே எனக்குச் சொந்த சம்பத்தாயிருப்பீர்கள். பூமியெல்லாம் என்னுடையது. நீங்கள் எனக்கு ஆசாரிய ராஜ்யமும் பரிசுத்த ஜாதியுமாய் இருப்பீர்கள் என்று நீ இஸ்ரயேல் புத்திரரோடே சொல்ல வேண்டிய வார்த்தைகள் என்றார்"***

இது நியாயப்பிரமாண உடன்படிக்கை என்று அழைக்கப்படுகிறது. இதை தேவன் மோசேயின்மூலம் இஸ்ரயேலரிடம் பண்ணினார். மேலும்,இந்த உடன்படிக்கையை தேவன் உலகின் மற்ற ஜனங்களோடு அல்லது கிறிஸ்தவர்களோடு பண்ணவில்லை என்பதைநாம் வாசிக்கிறோம் -

**சங்கீதம் 147:19,20**

***"யாக்கோபுக்குத் தம்முடைய வசனங்களையும், இஸ்ரயேலுக்குத் தமதுபிரமாணங்களையம் தமது நியாயங்களையும் அறிவிக்கிறார். அவர் வேறே ஜாதிக்கும் இப்படிச் செய்ததில்லை. அவருடைய நியாயங்களை அறியாமற்போகிறார்கள்"***

## உடன்படிக்கை - 3

மூன்றாவது உடன்படிக்கையைப் பற்றின விபரங்களை நாம் வாசிக்கையில் -

**எபிரேயர் 8:8-12**

***".. அவர்களை நோக்கி - கர்த்தர் சொல்லுகிறதென்னவெனில் - இஸ்ரயேல் குடும்பத்தாரோடும் யூதா குடும்பத்தோடும் நான் புது உடன்படிக்கையை ஏற்படுத்துங்காலம் வருகிறது. அவர்களுடைய பிதாக்களை எகிப்து தேசத்திலிருந்து கொண்டுவரும்படிக்கு நான் அவர்களுடைய கையைப் பிடித்த நாளிலே அவர்களோடு பண்ணின உடன்படிக்கையைப்போல இது இருப்பதில்லை. அந்த உடன்படிக்கையிலே அவர்கள் நிலைநிற்கவில்லையே. நானும் அவர்களைப் புறக்கணித்தேன் என்று கர்த்தர் சொல்லுகிறார். அந்த நாட்களுக்குப்பின்பு நான் இஸ்ரயேல் குடும்பத்தாரோடே பண்ணும் உடன்படிக்கையாவது, என்னுடைய பிரமாணங்களை அவர்களுடைய மனதிலே வைத்து, அவர்களுடைய இருதயங்களில் அவைகளை எழுதுவேன். நான் அவர்கள் தேவனாயிருப்பேன். அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள். அப்பொழுது சிறியவன் முதற்கொண்டு பெரியவன்வரைக்கும் எல்லாரும் என்னை அறிவார்கள். ஆகையால் கர்த்தரை அறிந்துகொள் என்று ஒருவன் தன்அயலானுக்கும், ஒருவன் தன் சகோதரனுக்கும் போதிக்கவேண்டுவதில்லை. ஏனெனில், நான் அவர்கள் அநியாயங்களைக் கிருபையாய் மன்னித்து, அவர்கள் பாவங்களையும்***

*அக்கிரமங்களையும் இனி நினையாமலிருப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்"*

இது புதிய உடன்படிக்கை என்று அழைக்கப்படுகிறது. இதை தேவன் முடிவுறுகிற பழைய நியாயப்பிரமாண உடன்படிக்கைக்கு பதிலாக இஸ்ரயேலர்களிடத்தில் செய்திருக்கிறார் . இந்த புதிய உடன்படிக்கையின் மத்தியஸ்தராக, இஸ்ரயேலின் மேசியாவாகிய (மல்கியா3:1) கிறிஸ்து இருப்பார். இவர் மோசேயைக் காட்டிலும் பெரிய மத்தியஸ்தராக இருப்பார்.

இந்த மூன்று உடன்படிக்கைகளைக் குறித்து வாசித்தறிந்த நாம் அவைகளை அப்பொழுது விரிவாக பார்ப்போம் .

இவைகளில் இரண்டு உடன்படிக்கைகள் தற்போதைய இரண்டாம் உலகத்தோடு சம்பந்தப்படுகிறது. மூன்றாவது உடன்படிக்கை வரப்போகிற மூன்றாம் உலகத்தோடு சம்பந்தப்பட்டது.

## 1. ஆபிரகாமின் உடன்படிக்கை

இது வாக்குத்தத்த உடன்படிக்கையாகவும், மத்தியஸ்தரை உடையதாயிராமல், ஆபிரகாமின் சந்ததியில் வந்து ஜாதிகளை ஆசீர்வதிக்கிற இரண்டு வகுப்பாரைக் குறித்து பேசுகிறதாயும் இருக்கிறதை வாசிப்போம் -

**ஆதியாகமம் 22:17**

***"நீ உன் புத்திரன் என்றும், உன் ஏகசுதன் என்றும் பாராமல், அவனை ஒப்புக்கொடுத்து இந்தக் காரியத்தைச்செய்தபடியால், நான் உன்னை ஆசீர்வதிக்கவே ஆசீர்வதித்து, உன் சந்ததியைப் வானத்து நட்சத்திரங்களைப்போலவும்..***

ஆபிரகாமிடம் பண்ணப்பட்டதும் "ஆபிரகாமின் உடன்படிக்கை" என்று அழைக்கப்படுகிற இந்த உடன்படிக்கையின்படி, ஆபிரகாம் இரண்டுவிதமான அல்லது இரண்டு வகுப்பாரை உள்ளடக்கிய "சந்ததிக்கு" தகப்பனாவார் என்று தெளிவாக சொல்லப்பட்டுள்ளது.

**ஆபிரகாமின் அந்த இரண்டு 'சந்ததிகளும்" யாரைக் குறிக்கும்?**

இதைக் குறித்து காண்கையில் -



"உன் சந்ததியை வானத்து நட்சத்திரங்களைப்போலவும்.." - இவர்கள் ஆபிரகாமின் "சந்ததியில்"

முதலாவதாக குறிக்கப்படும் "வகுப்பார்" ஆவர்.

மேலும் இவர்கள் "வானத்தின் நட்சத்திரங்கள்" என்று அடையாளப்படுத்தப்பட்டிருப்பதை நாம் காண்கிறோம். இவர்கள் யாராக இருப்பார்கள்? இதற்கான பதிலை வாசிப்போம் -

**கலாத்தியர் 3:7,29**

***"ஆகையால் விசுவாச மார்க்கத்தார் எவர்களோ, அவர்களே ஆபிரகாமின் பிள்ளைகளென்று அறிவீர்களாக"***

'நீங்கள் கிறிஸ்துவினுடையவர்களானால், ஆபிரகாமின் சந்ததியாராயும், வாக்குத்தத்தத்தின்படியே சுதந்தரராயும் இருக்கிறீர்கள்"

இவ்விரு வசனங்களும் "விசுவாச மார்க்கத்தாராயிருந்து.." கிறிஸ்துவுக்குள் இருப்பவர்கள்

ஆபிரகாமின் சந்ததியாவதை நமக்கு போதிக்கிறது. ஆம்.இவர்கள் இயேசுகிறிஸ்துவின் சரீரமான சபை ஆவர். இவர்கள் மாம்சத்தின்படி ஆபிரகாமின் பிள்ளைகளாயிராமல்.. ஆவிக்குரிய பிள்ளைகளாவர். ஏனெனில், "வானத்தின் நட்சத்திரங்கள்" என்றழைக்கப்படும் வகுப்பார் அல்லது இந்த சந்ததி" குறித்து நாம் வாசிக்கையில் -

**கலாத்தியர் 3:16**

***"ஆபிரகாமுக்கும் அவனுடைய சந்ததிக்கும் வாக்குத்தத்தங்கள் பண்ணப்பட்டன. சந்ததிகளுக்கு என்று அநேகரைக் குறித்து சொல்லாமல், உன் சந்ததிக்கு என்று ஒருவனைக் குறித்து சொல்லியிருக்கிறார். அந்த சந்ததி கிறிஸ்துவே"***

ஆம். இந்த "வகுப்பார்" அல்லது "வானத்தின் நட்சத்திரங்கள்" என்றழைக்கப்படும் வகுப்பார் "கிறிஸ்துவே". ஆம். தலை மற்றும் சரீரமாகிய கிறிஸ்து - 1,44,000அங்கத்தினர்களை உள்ளடக்கியுள்ளதை நாம் வாசிக்கிறோம் -

**வெளிப்படுத்தல் 14:1**

***"பின்பு நான் பார்த்தபோது இதோ, சீயோன் மலையின்மேல் ஆட்டுக்குட்டியானவரையும், அவரோடேகூட அவருடைய பிதாவின் நாமம் தங்கள் நெற்றிகளில் எழுதப்பட்டிருந்த இலட்சத்து நாற்பத்து நாலாயிரம்பேரையும் நிற்கக்கண்டேன்"***

இந்த 1,44,000அங்கத்தினர்களும் கிறிஸ்துவின் "சரீர அங்கமாவார்கள்". இவர்கள் தங்களுடைய தலையாகிய இயேசுகிறிஸ்துவுடன் சேர்ந்து
"நீதி வாசமாயிருக்கும் புதிய வானங்கள்" (2பேதுரு3:13) உருவாக்குகிறார்கள்.

இவ்விதமாக சபையாகிய 1,44,000அங்கத்தினரும் தேர்ந்தெடுக்கப்பட்டு, சோதிக்கப்பட்டு, அனைவரும் மகிமைப்படுத்தப்பட்டபின்பு ஆபிரகாமின் உடன்படிக்கை நிறைவேற்றப்படும்.

இப்படியிருக்க, ஆபிரகாமின் சந்ததியில் காணப்படும் இரண்டாம் வகுப்பார் - "கடற்கரை மணலைப்போலவும்" இவர்கள் ஆபிரகாமின் பூமிக்குரிய அல்லது மாம்சத்திற்குரிய "சந்ததியை" குறிக்கிறார்கள். இவர்கள் மாம்சீக இஸ்ரயேலர் ஆவர்.

இந்த "ஆபிரகாமின் உடன்படிக்கையின்" மூலம் பூமிக்குரிய "சந்ததியாகும்" இஸ்ரயேலர், பூமியில் எல்லா ஜாதிகளையும் "ஆசீர்வதிக்க" பயன்படுத்தப்படுகிறார்கள்.
இது எப்பொழுது சம்பவிக்கும் என்று வாசிப்போம் -

**ரோமர் 11:26,29**

***"இந்தப்பிரகாரம் இஸ்ரயேலரெல்லாரும் இரட்சிக்கப்படுவார்கள். மீட்கிறவர் சீயோனிலிருந்து வந்து, அவபக்தியை யாக்கோபைவிட்டு விலக்குவார் என்றும், நான் அவர்களுடைய பாவங்களை நீக்கும்போது, இதுவே நான் அவர்களுடனே செய்யும் உடன்படிக்கை என்றும் எழுதியிருக்கிறது. சுவிசேஷத்தைக் குறித்து அவர்கள் உங்கள் நிமித்தம் பகைஞராயிருக்கிறார்கள். தெரிந்துகொள்ளுதலைக் குறித்து அவர்கள் பிதாக்களினிமித்தம் அன்புகூறப்பட்டவர்களாயிருக்கிறார்கள். தேவனுடைய கிருபை வரங்களும் அவர்களை அழைத்த அழைப்பும் மாறாதவைகளே"***

இஸ்ரயேலர் அனைவரும் "இரட்சிக்கப்பட்டு", தங்களுடைய "மனக்கண்கள்" திறக்கப்பெறுவார்கள்.

ஆனால் சபையினுடைய நிறைவு நடந்தபிறகே இது நிறைவேறும் என்று வாசிக்கிறோம் -

**ரோமர் 11:25**

***"மேலும், சகோதரரே, நீங்கள்உங்களையே புத்திமான்களென்று எண்ணாதபடிக்கு ஒரு இரகசியத்தை நீங்கள் அறியவேண்டுமென்றிருக்கிறேன். அதென்னவெனில், புறஜாதியாருடைய நிறைவு உண்டாகும்வரைக்கும் இஸ்ரயேலரில் ஒரு பங்குக்குக் கடினமான மனதுண்டாயிருக்கும்"***

இஸ்ரயேலர் இயேசுவை தங்களுடைய மேசியா என்று உணராதபடிக்கு இருக்கும் அவர்களுடைய "குருட்டாட்டம்" 1,44,000 அங்கத்தினரின் நிறைவுமட்டும் அல்லது "புறஜாதியாரின் நிறைவு" உண்டாகும்வரைக்கும் நீடிக்கும்.

பின்பு ஆவிக்குரிய "சந்ததி" நிறைவுபெற்று, பூமிக்குரிய "சந்ததி" ஆயத்தம்பண்ணப்பட்டு, **'பூமியின் சகல ஜாதிகளும்"** ஆசீர்வதிக்கப்படுவது இஸ்ரயேலில் ஸ்தாபிக்கப்பட்ட தேவனுடைய இராஜ்யத்தின்(ஏசாயா2:2,3) கண்ணுக்குத் தெரிகிற பாகத்தின்மூலம் துவங்கும்.

மேலும் தேவனுடைய இராஜ்யத்தில் இஸ்ரயேலர் அனைவரும் எபிரேயர் 11ம்அதிகாரத்தில் விவரிக்கப்பட்டுள்ள 'முற்பிதாக்களின்" தலைமையில் வழிநடத்தப்படுவதை நாம் வாசிக்கிறோம் -

**ஏசாயா 1:26**

***"உன் நியாயாதிபதிகளை முன்னிருந்ததுபோலவும், உன் ஆலோசனைக்காரரை ஆதியில் இருந்ததுபோலவும் திரும்பக் கட்டளையிடுவேன். பின்பு நீ நீதிபுரம் என்றும், சத்திய நகரம் என்றும் பெயர்பெறுவாய்"***

முற்பிதாக்கள் இஸ்ரயேலை வழிநடத்துகிறவர்களாக மாத்திரமல்லாமல், ஆளக்கூடியவர்களாகவும் இருப்பதை நாம் வாசிக்கிறோம் -

**சங்கீதம் 45:16**

***"உமது பிதாக்களுக்குப் பதிலாக உமது குமாரர் இருப்பார்கள், அவர்களைப் பூமியெங்கும் பிரபுக்களாக வைப்பீர்"***

இவர்கள் "பூமியெங்கும்" ஆளுகை செய்யும் பிரபுக்களாக இருப்பர்.

இப்பொழுது நாம் அடுத்த உடன்படிக்கையாகிய - நியாயப்பிரமாண உடன்படிக்கையை குறித்து காணும்முன்பாக, வேறொரு விஷயத்தையும் கவனிக்கலாம் -

**கலாத்தியர் 4:22-28**

***"ஆபிரகாமுக்கு இரண்டு குமாரர் இருந்தார்கள் என்று எழுதியிருக்கிறது. ஒருவன் அடிமையானவளிடத்தில் பிறந்தவன். ஒருவன் சுயாதீனமுள்ளவளிடத்தில் பிறந்தவன். அடிமையானவளிடத்தில் பிறந்தவன் மாம்சத்தின்படி பிறந்தான். சுயாதீனமுள்ளவளிடத்தில் பிறந்தவன் வாக்குத்தத்தத்தின்படி பிறந்தான். இவைகள் ஞான அர்த்தமுள்ளவைகள். அந்த ஸ்திரீகள் இரண்டு ஏற்பாடுகளாம். ஒன்று சீனாய் மலையிலுண்டான ஏற்பாடு. அது அடிமைத்தனத்துக்குள்ளாகப் பிள்ளை பெறுகிறது. அது ஆகார் என்பவள்தானே. ஆகார் என்பது அரபி தேசத்திலுள்ள சீனாய் மலை. அந்த ஆகார் இப்பொழுதிருக்கிற எருசலேமுக்குச் சரி. இவள் தன் பிள்ளைகளோடே கூட***

*அடிமைப்பட்டிருக்கிறாளே. மேலான எருசலேமோ சுயாதீனமுள்ளவள். அவளே நம்மெல்லாருக்கும் தாயானவள். அந்தப்படி பிள்ளைபெறாத மலடியே, மகிழ்ந்திரு, கர்ப்பவேதனைப்படாதவளே, களிப்பாய் எழும்பி ஆர்ப்பரி. புருஷனுள்ளவளைப் பார்க்கிலும் அநாத ஸ்திரீக்கோ அதிக பிள்ளைகளுண்டு என்று எழுதியிருக்கிறது. சகோதரரே, நாம் ஈசாக்கைப்போல வாக்குத்தத்தத்துப் பிள்ளைகளாயிருக்கிறோம்"*

இங்கு அப்போஸ்தலனாகிய பவுல் இந்த இரண்டு உடன்படிக்கைகளையும் ஆபிரகாமின் இரண்டு மனைவிகள் மற்றும் அவர்களுடைய பிள்ளைகளுக்கு ஒப்பிட்டுப் பேசுவதைக் காண்கிறோம்.


**முதல் மனைவி 'ஆபிரகாமின் உடன்படிக்கையை" குறிப்பதாகவும், சாராளாகிய அவளின் பிள்ளை ஈசாக்கு அதன் பலனாகவும்** குறிக்கப்படுகிறார்.


**இரண்டாம் மனைவி அடுத்த உடன்படிக்கையாகிய நியாயப்பிரமாண உடன்படிக்கையை குறிப்பதாகவும், ஆகாராகிய அவளின் பிள்ளை இஸ்மயேல் அதன் பலனாகவும்** குறிக்கப்படுகிறார்.

ஆம். ஆபிரகாமினுடைய இரண்டு மனைவிகளின்மூலம் பிறந்தவர்களாகிய இந்த இருவரும் அந்த இரண்டு உடன்படிக்கைகளின்மூலம் உண்டாகும் பலனைக் குறிக்கிறார்கள்.

இதை விளக்குகிற வரைபடத்தை நீங்கள் கீழே காணலாம் -

**ஆபிரகாம்**





| முதல் மனைவி | இரண்டாம் மனைவி |
|---|---|
| சாராள் | ஆகார் |
| ஈசாக்கு | இஸ்மயேல் |
| 'வாக்குத்தத்தத்தின் சந்ததி" | 'அடிமையானவளின் சந்ததி" |
| ஆவிக்குரிய இஸ்ரயேலர் | மாம்சீக இஸ்ரயேலர் |
| கலாத்தியர் 6:16 | கலாத்தியர் 4:2 |

## 2. நியாயப்பிரமாண உடன்படிக்கை

இது நாம் பார்க்கப்போகிற தேவனுடைய இரண்டாவது உடன்படிக்கையாகும். இந்த உடன்படிக்கையானது சீனாய் மலையின்மீது மோசேயிடம் கொடுக்கப்பட்டதாகும்.

இது பத்து பிரதான கற்பனைகளையும், 3600 மற்ற பிரமாணங்களையும் உள்ளடக்கியுள்ளது. இவையனைத்தும் லேவியராகமம் மற்றும் எண்ணாகமம் புத்தகத்தில் பதிவாகியுள்ளது.
இந்த உடன்படிக்கையின் மத்தியஸ்தர் மோசே ஆவார். இந்த உடன்படிக்கையை தேவன் உண்டுபண்ணின காலத்தை குறித்து வாசிக்கையில் -

**கலாத்தியர் 3:17**

*"ஆதலால் நான் சொல்லுகிறதென்னவெனில், கிறிஸ்துவை முன்னிட்டு தேவனால்*

***முன்உறுதிபண்ணப்பட்ட உடன்படிக்கையை நானூற்றுமுப்பது வருஷத்திற்குப்பின்பு உண்டான நியாயப்பிரமாணமானது தள்ளி, வாக்குத்தத்தத்தை வியர்த்தமாக்கமாட்டாது"***

இந்த நியாயப்பிரமாண உடன்படிக்கையானது ஆபிரகாமின் உடன்படிக்கைக்கு பின்பு கொடுக்கப்பட்டதாகும். ஆபிரகாமின் உடன்படிக்கையே உண்மையான உடன்படிக்கையாக இருக்கிறது. நியாயப்பிரமாண உடன்படிக்கை பின்னாளில் (430 வருடங்களுக்குப் பிறகு) சேர்க்கப்பட்டதாக இருக்கிறது. இஸ்ரயேலர்களுக்கு கொடுக்கப்பட்ட இந்த நியாயப்பிரமாண உடன்படிக்கையானது அதை பூரணமாக நிறைவேற்றுபவர்களுக்கு நித்திய ஜீவனை வாக்களிப்பதை வாசிக்கிறோம் -

### லேவியராகமம் 18:5

***"ஆகையால் என் கட்டளைகளையும் என் நியாயங்களையும் கைக்கொள்ளக்கடவீர்கள். அவைகளின்படி செய்கிறவன் எவனும் அவைகளால் பிழைப்பான் நான் கர்த்தர்"***

ஆகிலும் வாக்களிக்கப்பட்ட அந்த ஜீவனை இஸ்ரயேலரில் ஒருவரும் பெறவில்லை. காரணம் ஒருவராலும் இந்த பூரண பிரமாணத்தை நிறைவேற்றமுடியாததை நாம் வாசிக்கிறோம் -

### யாக்கோபு 2:10

***"எப்படியெனில், ஒருவன் நியாயப்பிரமாணம் முழுவதையும் கைக்கொண்டிருந்தும், ஒன்றிலே தவறினால் எல்லாவற்றிலும் குற்றவாளியாயிருப்பான்"***

இதைக் குறித்து அப்போஸ்தலனாகிய பவுல் எழுதுகையில் -

### கலாத்தியர் 3:11

***"நியாயப்பிரமாணத்தினாலே ஒருவனும் தேவனிடத்தில் நீதிமானாகிறதில்லையென்பது வெளியரங்கமாயிருக்கிறது. ஏனெனில் விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறதே"***

இங்கு அப்போஸ்தலனாகிய பவுல் இஸ்ரயேலர் இந்த பூரண பிரமாணத்தை கடைப்பிடிக்கமுடியாமல்போனதையும், அதின்மூலம் தேவனுடைய பார்வையில் நீதிமானாக்கப்படாததையும் குறித்து பேசுகிறதை காண்கிறோம். இதைத் தொடர்ந்து நியாயப்பிரமாண உடன்படிக்கைக்கு உட்படாத ஆவிக்குரிய இஸ்ரயேலருக்கு "ஆபிரகாமின் உடன்படிக்கையில்" விசுவாசத்தினால் உண்டாகும் "கிருபையை" குறித்து அப்போஸ்தலனாகிய பவுல் பேசுகிறார். இக் காரியங்களையெல்லாம் உணரும்போது நமக்குள் ஒரு முக்கியமான கேள்வி எழுகிறது. அதைக் குறித்து வாசிக்கையில் -

### கலாத்தியர் 3:19

***"அப்படியானால், நியாயப்பிரமாணத்தின் நோக்கமென்ன? வாக்குத்தத்தத்தைப் பெற்ற சந்ததி வருமளவும் அது அக்கிரமங்களினிமித்தமாகக் கூட்டப்பட்டு, தேவதூதரைக்கொண்டு மத்தியஸ்தன் கையிலே கட்டளையிடப்பட்டது"***

இப்படியிருக்க, நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்டதன் நோக்கம் என்ன?
இதற்கான பதில் இரண்டு காரணங்களைக் கொண்டுள்ளது -

1. "வாக்குத்தத்தத்தைப் பெற்ற சந்ததி வருமளவும் அது அக்கிரமங்களினிமித்தமாகக் கட்டப்பட்டது(கிறிஸ்து வருமட்டும்) அந்த 3600 பிரமாணங்களும் இஸ்ரயேலில் மிக வேகமாக பெருகின பாவத்தை உணரவும், அதை குறித்து எச்சரிக்கவும் உதவியது. அவைகளில் "வேண்டாம்.." என்று சொல்லப்பட்டிருந்த ஒவ்வொரு கட்டளைகளும் "பாவ" நிலை குறைய உதவியது.

2. நியாயப்பிரமாணமானது ஆவிக்குரிய இஸ்ரயேலருக்கு அநேக நிழல்களை தருவதாக வாசிக்கிறோம்

**எபிரேயர் 10:1**

***"இப்படியிருக்க, நியாயப்பிரமாணமானது வரப்போகிற நன்மைகளின் பொருளாயிராமல், அவைகளின் நிழலாய் மாத்திரம் இருக்கிறபடியால், வருஷந்தோறும் இடைவிடாமல் செலுத்தப்பட்டுவருகிற ஒரேவிதமான பலிகளினாலே அவைகளைச் செலுத்த வருகிறவர்களை ஒருக்காலும் பூரணப்படுத்தமாட்டாது"***

நியாயப்பிரமாணமானது ஆவிக்குரிய இஸ்ரயேலராகிய சபையாருக்கான மாபெரும் சத்தியங்களை போதிக்கும் நிழல்களை நிறைவாக பெற்றுள்ளது. இதற்கு உதாரணமாக யாத்திராகமம் 12ம் அதிகாரத்தில் இஸ்ரயேலருக்கு முதல் பிரமாணமாக கொடுக்கப்பட்ட "பஸ்காவின்" நியமனத்தை காண்கிறோம்.

இந்த "பஸ்காவின்" நியமனம் மற்றும் அதன் வழிமுறைகள் கிறிஸ்தவர்களுக்கு மிக விசேஷமான பாடங்களை போதிக்கிறது.

ஏனென்றால், "பஸ்காவின் ஆடு"குறிப்பதை குறித்து அப்.பவுல் பேசுகையில் -

**1கொரிந்தியர் 5:7**

***"ஆகையால், நீங்கள் புளிப்பில்லாதவர்களாயிருக்கிறபடியே, புதிதாய்ப் பிசைந்த மாவாயிருக்கும்படிக்கு, பழைய புளித்த மாவைப் புறம்பே கழித்துப்போடுங்கள். ஏனெனில் நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காகப் பலியிடப்பட்டிருக்கிறாரே"***

பஸ்கா ஆடு நம் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவைக் குறிக்கிறது.
மேலும் யூபிலியின் பிரமாணமும் தேவனுடைய இராஜ்யம் பூமியில் ஸ்தாபிக்கப்படும் கிறிஸ்துவின் "ஆயிரவருட அரசாட்சியின்" இளைப்பாறுதலின் காலங்களை"(அப்போஸ்தலர் 3:21) குறிக்கிறது. இவ்விதமாக, ஒருவகையில் இஸ்ரயேலருக்கு ஜீவனை பெற்றுக்கொள்வதில் நியாயப்பிரமாண உடன்படிக்கை பலனளிக்கவில்லை என்றாலும், அது சிலரை கிறிஸ்துவினிடத்தில் வழிநடத்த உதவியது. இதை பின்வரும் வசனத்தில் வாசிக்கிறோம் -

**கலாத்தியர் 3:24**

***"இவ்விதமாக,நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்படுவதற்கு நியாயப்பிரமாணம் நம்மைக் கிறிஸ்துவினிடத்தில் வழிநடத்துகிற உபாத்தியராய் இருந்தது"***

யூதர்களில் சிலர் தங்களுக்கு ஒரு இரட்சகர்வேண்டும் என்பதை உணர்ந்து அதன்மூலம் கிறிஸ்துவை சேர்ந்தார்கள். இப்படியிருக்க, இஸ்ரயேல் தேசத்தில் மீதியானவர்களின் நிலை என்ன? இதற்கான பதிலை வாசிக்கையில் - **ஏசாயா 45:7**

***"இஸ்ரயேலோ , கர்த்தராலே நித்திய இரட்சிப்பினால் இரட்சிக்கப்படுவான். நீங்கள்***

***என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் வெட்கப்படாமலும் கலங்காமலும் இருப்பீர்கள்"***

இது ஒரு "ஆசீர்வாதமான" உத்திரவாதமாகும். இது எவ்விதமாக சம்பவிக்கும்? இதற்கான பதிலை புரிந்துகொள்வதற்கு நம்முடைய கவனத்தை தேவனுடைய மூன்றாவது உடன்படிக்கையை நோக்கி செலுத்துவது அவசியம்.

## 3. புதிய உடன்படிக்கை

இந்த "புதிய உடன்படிக்கையானது" இரகசியமானதும், வெகு சிலரே அறிந்திருக்கிறதுமாக இருக்கிறது. மேலும் கிறிஸ்தவர்களில் அநேகர் இதை தவறாக புரிந்துகொண்டு தற்பொழுது சபையானது இந்த புது உடன்படிக்கைக்குள்ளாக இருப்பதாக நம்புகின்றனர். ஆனால் அது உண்மையல்ல என்று நாம் வாசிக்கிறோம் -

**எரேமியா 31:31-34**

***"இதோ, நாட்கள் வருமென்று கர்த்தர்சொல்லுகிறார். அப்பொழுது இஸ்ரயேல் குடும்பத்தோடும் யூதா குடும்பத்தோடும் புது உடன்படிக்கை பண்ணுவேன். நான் அவர்கள் பிதாக்களை எகிப்து தேசத்திலிருந்து அழைத்து வரக் கைப்பிடித்தநாளிலே அவர்களோடே பண்ணின உடன்படிக்கையின்படி அல்ல. ஏனெனில், நான் அவர்களுக்கு நாயகராயிருந்தும், அந்த என் உடன்படிக்கையை அவர்கள் மீறி அவமாக்கிப்போட்டார்களே என்று கர்த்தர் சொல்லுகிறார். அந்நாட்களுக்குப் பிற்பாடு, நான் இஸ்ரயேல் குடும்பத்தோடே பண்ணப்போகிற உடன்படிக்கையானது, நான் என் நியாயப்பிரமாணத்தை அவர்கள் உள்ளத்திலே வைத்து, அதை அவர்கள் இருதயத்திலே எழுதி, நான் அவர்கள் தேவனாயிருப்பேன், அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். இனி ஒருவன் தன் அயலானையும், ஒருவன் தன் சகோதரனையும் நோக்கி - கர்த்தரை அறிந்துகொள் என்று போதிப்பதில்லை. அவர்களில் சிறியவன் முதல் பெரியவன் மட்டும், எல்லாரும் என்னை அறிந்துகொள்வார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். நான் அவர்கள் அக்கிரமத்தை மன்னித்து, அவர்கள் பாவங்களை இனி நினையாதிருப்பேன்"***

இங்கு இந்த புதிய உடன்படிக்கை இஸ்ரயேல் தேசத்தோடும் அதன் 12 கோத்திரத்தாருடனும் பண்ணப்படுவதாக தெளிவாக உரைக்கப்பட்டுள்ளது. ஏனென்றால், தேவன் ஆபிரகாமிடம் செய்த வாக்குத்தத்தத்தை ஒருபோதும் மறப்பதில்லை. காரணம் தேவன் அவரை

**ஏசாயா 41:8**

***"என் தாசனாகிய இஸ்ரயேலே.. என் சிநேகிதனான ஆபிரகாமின் சந்ததியே.."***

என்றும், வேறொரு வசனத்தில்,

**யாக்கோபு 2:23**

***"அப்படியே ஆபிரகாம் தேவனை விசுவாசித்தான்.. அவன் தேவனுடைய சிநேகிதனென்னப்பட்டான்"***

என்றும் அழைக்கப்படுகிறார்.

ஆகையால் தேவன்கொடுத்த வாக்குத்தத்தப்படி இஸ்ரயேலர் அனைவரும்

இரட்சிக்கப்படுவார்கள். இதை தேவன் எவ்வாறு நிறைவேற்றுவார்?

இதை அவர்களோடு ஒரு புதிய உடன்படிக்கையை ஏற்படுத்தி, அவர்களுடைய பாவங்களுக்கான மன்னிப்பை உண்டுபண்ணி சீர்பொருந்தப் பண்ணுவார்.

இதை அனைத்தும் மூன்றாம் உலகத்தில் - தேவனுடைய இராஜ்யத்தில் நிறைவேறும். அப்பொழுது பூமியின் ஜாதிகள் அனைத்தும் இஸ்ரயேலரிடம் திரும்புவார்கள் என்று வாசிக்கிறோம்

**சகரியா 8:20-23**

***"இன்னும் ஜனங்களும் அநேகம் பட்டணங்களின் குடிகளும் வருவார்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார். ஒரு பட்டணத்தின் குடிகள் மறுபட்டணத்தின் குடிகளிடத்தில்போய், நாம் கர்த்தருடைய சமுகத்தில் விண்ணப்பம் பண்ணவும் சேனைகளின் கர்த்தரைத்தேடவும் தீ விரித்துப்போவோம் வாருங்கள்,நாங்களும்போவோம் என்று சொல்லுவார்கள். அநேக ஜனங்களும் பலத்த ஜாதிகளும் எருசலேமிலே சேனைகளின் கர்த்தரைத்தேடவும், கர்த்தருடைய சமுகத்தில் விண்ணப்பம் பண்ணவும் வருவார்கள். அந்நாட்களில் பலவித பாஷைக்காரராகிய புறஜாதியாரில் பத்து மனுஷர் ஒரு யூதனுடைய வஸ்திரத்தொங்கலைப் பிடித்துக்கொண்டு, தேவன் உங்களோடே இருக்கிறார் என்று கேள்விப்பட்டோம், ஆகையால் உங்களோடே கூடப்போவோம் என்றுசொல்லி, அவனைப் பற்றிக் கொள்வார்கள்என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார் என்றார்"***

ஆம், பூமியின் ஜாதிகள் அனைத்தும் தாங்களாக முன்வந்து புதிய உடன்படிக்கையில் தங்களை உட்படுத்திக்கொள்வார்கள் என்று வாசிக்கிறோம் -

**ஏசாயா 2:3**

***"திரளான ஜனங்கள் புறப்பட்டுவந்து - நாம் கர்த்தரின் பர்வதத்துக்கும், யாக்கோபின் தேவனுடைய ஆலயத்துக்கும் போவோம் வாருங்கள். அவர் தமது வழிகளை நமக்குப் போதிப்பார். அவர் பாதைகளில் நடப்போம் என்பார்கள். ஏனெனில் சீயோனிலிருந்து வேதமும், எருசலேமிலிருந்து கர்த்தரின் வசனமும் வெளிப்படும்"***

இங்கு குறிப்பிடப்பட்டுள்ள - "அவருடைய வழிகள்" என்பது புதிய உடன்படிக்கையில் காணப்படுகிற சட்டதிட்டங்களாகும். இவைகளுக்கு பூமியின் ஜாதிகள் அனைத்தும் படிப்படியாக கீழ்ப்படிந்து உத்தம இஸ்ரயேலராகவும், "ஆபிரகாமின் சந்ததியாகவும்" மற்றும் "கடற்கரை மணல்" குறிக்கிற வகுப்பாராகவும் மாறுவார்கள்.

நியாயப்பிரமாண உடன்படிக்கையைப்போல இந்த புதிய உடன்படிக்கையும் ஒரு மத்தியஸ்தரைப் பெற்றிருக்கும் என்று வாசிக்கிறோம் -

**மல்கியா 3:1**

***"இதோ, நான் என் தூதனை அனுப்புகிறேன்... அப்பொழுது நீங்கள் தேடுகிற ஆண்டவரும் நீங்கள் விரும்புகிற உடன்படிக்கையின் தூதனுமானவர் தம்முடைய ஆலயத்துக்குத் தீவிரமாய் வருவார்.."***

அந்த மத்தியஸ்தராக இயேசுவும் அவருடைய சரீரமாகிய சபையும் இருப்பர்(யூதா 14). இந்த புதிய உடன்படிக்கை ஜனங்களுக்கு உறுதிப்படுத்தும் வார்த்தைகளை வாசிப்போம் -

**எபிரேயர் 10:16,17**

***"அந்த நாட்களுக்குப்பின்பு நான் அவர்களோடே பண்ணும் உடன்படிக்கையாவது - நான் என்னுடைய பிரமாணங்களை அவர்களுடைய இருதயங்களில் வைத்து, அவைகளை அவர்களுடைய மனதில் எழுதுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறாரென்பதை உரைத்தபின்பு, அவர்களுடைய பாவங்களையும் அவர்களுடைய அக்கிரமங்களையும் நான் இனி நினைப்பதில்லை என்பதைச் சொல்லுகிறார்"***

இவ்வசனம் தேவன் இஸ்ரயேலர்களோடு பண்ணுகிற புதிய உடன்படிக்கையைக் குறித்துப் பேசுகிறது. இங்கு அது "அவைகள்" என்று குறிப்பிடப்படுகிறது. மேலும் "அந்த நாட்களுக்குப்பின்பு" என்பது எதைக்குறிக்கிறது? இது இயேசு தம் வார்த்தைகளில் "உங்கள் வீடு உங்களுக்கு பாழாக்கிவிடப்படும்(மத்தேயு23:38)என்று இஸ்ரயேலர் ஆசீர்வாதத்திலிருந்து புறக்கணிக்கப்படுவதாக கூறின சுவிசேஷயுகத்தின் கடைசிக்கட்டத்தைக் குறிக்கும். இந்த காலகட்டத்தை தேவன்'இரட்டிப்பு" என்று குறிப்பிடுவதை வாசிக்கிறோம்.

**எரேமியா 16:18**

***"முதலாவது நான் அவர்களுடைய அக்கிரமத்துக்கும் அவர்களுடைய பாவத்துக்கும் இரட்டிப்பாய் நீதியைச் சரிக்கட்டுவேன்"***

இந்தக் காலகட்டத்தில் இஸ்ரயேலர் மிகுந்த உபத்திரவம் மற்றும் வேதனையை அனுபவித்த தண்டனைக்கு மத்தியில் இருப்பதை லூக்கா 16:23ல், ஐசுவரியவானும், ஏழை லாசரு என்று உவமையில், ஐசுவரியவான் "அக்கினியின்" நடுவில் இருப்பதாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. இப்பொழுது நாம் வாசிக்கிறபடி -

***"நான் என்னுடைய பிரமாணங்களை அவர்களுடைய இருதயங்களில் வைத்து, அவைகளை அவர்களுடைய மனதில் எழுதுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்"***

என்பதை புதிய உடன்படிக்கை நிறைவேற்றும் விதத்தைப் புரிந்துகொள்ள முயற்சிப்போம்.
இங்கு "நான் என்னுடைய பிரமாணங்களை அவர்களுடைய மனதில்வைத்து"
இது எதைக் குறிக்கும்?
இது தேவனுடைய பிரமாணங்கள் - அவருடைய வார்த்தைகளை, அவருடைய வார்த்தைகளில் பதிவாகியுள்ளபடி அனைவரும் புரிந்துகொள்ளும் நுண்ணறிவை குறிப்பதாக வாசிக்கிறோம் -

**ஆபகூக் 2:14**

***"சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்திருக்கிறதுபோல, பூமி கர்த்தருடைய மகிமையை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும்"***

ஏனெனில் அந்நாட்களில் கர்த்தர் ***"மாம்சமான யாவர்மேலும் அவருடைய ஆவியை ஊற்றுவார்".*** அனைவரும் தேவனுடைய பிரமாணங்களை புரிந்துகொண்டு உணரும் வாய்ப்பை பெறுவார்கள்.

***"நான் என் நியாயப்பிரமாணத்தை அவர்கள் உள்ளத்தில் வைத்து"***

இது மனிதனுடைய நோக்கம் அல்லது சித்தத்தைக் குறிக்கிறது. தேவன் தந்த "தீமைக்கான அனுமதி" இஸ்ரயேலர் மற்றும் உலகத்தார் அனைவருக்கும் தீமையினால் உண்டான அனுபவங்கள் மற்றும் விளைவுகளை போதுமான அளவிற்கு பெற்று தந்திருக்கும்

இதன்மூலம் தேவனுக்கு கீழ்ப்படியாமல் இருப்பதற்கும், கீழ்படிந்து இருப்பதற்கும் உள்ள மிகப்பெரிய வித்தியாசத்தை உணர்ந்து, இஸ்ரயேலர் மற்றும் உலகத்தார் அனைவரும் தாங்களாக முன்வந்து தேவனுடைய வழியைத் தேடுவார்கள் என்று வாசிக்கிறோம் -

**சங்கீதம் 119:127,128**

***"ஆதலால் நான் பொன்னிலும் பசும்பொன்னிலும் அதிகமாய் உமது கற்பனைகளில் பிரியப்படுகிறேன். எல்லாவற்றைப்பற்றியும் நீர் அருளின எல்லாக் கட்டளைகளும் செம்மையென்று எண்ணி, சகல பொய்வழிகளையும் வெறுக்கிறேன்"***

இதுவே அந்நாட்களில் மனுக்குலத்தின் நோக்கமாக இருக்கும். இதைக்குறித்து வாசிக்கையில் -

**சங்கீதம் 119:112**

***"முடிவுபரியந்தம் இடைவிடாமல் உம்முடைய பிரமாணங்களின்படி செய்ய என் இருதயத்தைச் சாய்த்தேன்"***

அநேகர் தங்களுடைய ஏமாற்றத்தை வெளிப்படுத்துவதைக் குறித்தும் வாசிக்கிறோம் -

**சங்கீதம் 119:136**

***"உம்முடைய வேதத்தை மனுஷர்காத்து நடவாதபடியால் என் கண்களிலிருந்து நீர்த்தாரைகள் ஓடுகிறது"***

**சங்கீதம் 119:5**

***"உமது பிரமாணங்களைக் கைக்கொள்ளும்படி என் நடைகள் ஸ்திரப்பட்டால் நலமாயிருக்கும்"***

இவ்விதமாக முந்தைய நியாயப்பிரமாண உடன்படிக்கையைபோல இல்லாமல், இந்த ***"புதிய உடன்படிக்கையானது"*** மத்தியஸ்தராகிய இயேசுவின் கீழ் பிரமாண்ட வெற்றியைப்பெறும். இந்த ***"புதிய உடன்படிக்கை"*** வெகு சிலரே அறிந்திருக்கிற ஆபிரகாமின் மற்றொரு மனைவியின் மூலம் நிழலாக காண்பிக்கப்பட்டுள்ளது.

அப்படியென்றால் சாராளுக்கு அடுத்தபடியாக ஆபிரகாம் வேறொரு மனைவியைக் கொண்டது உண்மையா? இதற்கான பதிலை வாசிக்கையில் -

**ஆதியாகமம் 25:1**

***"ஆபிரகாம் கேத்தூராள் என்னும் பேர்கொண்ட ஒரு ஸ்திரீயையும் விவாகம்பண்ணியிருந்தாள்"***




அவருடைய மூன்றாம் மனைவி கேத்தூராள் என்று அழைக்கப்படுகிறாள். மேலும் அவள் ஒரு புதிய உடன்படிக்கையைக் குறிக்கிறாள். இதைக்குறித்து வாசிப்போம்

**ஆதியாகமம் 25:2**

***"அவள் அவனுக்கு சிம்ரானையும், யக்ஷானையும், மேதானையும், மீதியானையும், இஸ்பாக்கையும், சூவாகையும் பெற்றாள்"***

அவள் மொத்தம் ஆறு குமாரர்களை பெற்றெடுத்தாள்.

இவர்கள் அனைவரும் புதிய உடன்படிக்கையின் பலனாகிய முழு

மனுக்குலத்தையும் குறிக்கிறார்கள்.

இந்த **'ஆறு"** என்ற எண்ணிக்கை மனுக்குலம் உலகில் வசிக்கிற ஆறுகண்டங்களை குறிக்கிறது. அவை **வடஅமெரிக்கா, தென் அமெரிக்கா, ஆப்பிரிக்கா, ஐரோப்பா, ஆசியா மற்றும் ஆஸ்திரேலியா.**

இவ்விதமாக தேவனுடைய உடன்படிக்கைகளைப் பற்றின பாடத்தைக் கண்டறிந்துள்ளோம்.

**தேவன் தாமே நம் அனைவரையும் ஆசீர்வதித்து,**
**சத்தியத்தின் பாதையில் நித்தமும் நடத்துவாராக ஆமென்.**

**இந்த சத்தியங்களை பற்றி மேலும் அறிந்து கொள்ள தொடர்பு கொள்ளவும்:**
For Further Details Please Contact:
bibleresearchandstudy@gmail.com, victorgnanaraj01@gmail.com victor_vicky
+919443321874 https://www.facebook.com/bibleresearch/